# ஒன்டாரியோவில் உடல்நலப் பராமரிப்பு: வீட்டில் பராமரிப்பைக் (ஹோம் கெயார்) கண்டடைதல்

அநேகருக்கு, தங்கள் சொந்த வீடுகளிலேயே வாழ்வதற்கு உதவி தேவைப்படும் ஒரு சமயம் வரும். உங்களுக்கோ அல்லது நீங்கள் நேசிக்கும் ஒருவருக்கோ வீட்டுப் பராமரிப்புத் தேவைப்பட்டால் நீங்கள் என்ன செய்யவேண்டும்? இந்தத் தகவல் இதழ்கள் அதற்கான ஒரு நல்ல தொடக்க இடமாக அமையும். ஒன்டாரியோவில் உங்களுக்குக் கிடைக்கக்கூடிய அநேக வீட்டுப் பராமரிப்புகளைப் பற்றி நீங்கள் இதன் மூலம் அறிந்துகொள்ளவீர்கள். இந்தப் பக்கங்களிலுள்ள தகவல்களை நாங்கள் இரண்டு பகுதிகளாக ஒழுங்கமைத்திருக்கிறோம்:

- வீட்டுப் பராமரிப்பு எப்படி வேலை செய்கிறது
- வீட்டுப் பராமரிப்பு சேவையை எப்படி ஏற்பாடு செய்யலாம்

நீங்கள் இந்தத் தகவல் இதழை மேலதிக மொழிகளில் *ontario.ca/healthcarebasics* என்ற இணையதளத்தில் காணலாம். "வேற்று மொழிகளில் தகவல்கள்" என்ற விசைப் பொறியை அழுத்தவும். ஒன்டாரியோவில் மருத்துவப் பராமரிப்பைப் பெற்றுக்கொள்வது பற்றி மேலதிகமாகத் தெரிந்துகொள்வதற்கான இணைப்பையும் இந்த இணையதளம் உங்களுக்குக் கொடுக்கும்.

## வீட்டுப் பராமரிப்பு எப்படிச் செயற்படுகிறது

### 1. வீட்டுப் பராமரிப்பு என்றால் என்ன?

மக்கள் தங்கள் ஆரோக்கியம் மற்றும் சுதந்திரத்தைத் தங்கள் வீடுகளிலேயே பேணிப் பராமரிக்க வீட்டுப் பராமரிப்புச் சேவைகள் உதவுகின்றன. இந்த சேவைகளில் அநேகமானவற்றிற்கு ஒன்டாரியோ அரசாங்கத்தால் நிதியுதவி வழங்கப்படுகிறது.

### 2. வீட்டுப் பராமரிப்பின் மூலமாக நான் என்ன வகையான சேவைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்?

இந்த பட்டியல் வீட்டுப் பராமரிப்புச் சேவைகளின் நான்கு பிரதான வகைகளைச் தருகிறது:

உடல்நலப் பராமரிப்பு சேவைத் தொழில் நெறிஞரைச் சந்தித்தல்

நீங்கள் மருத்துவமனையில் சிறிது காலம் தங்கியிருந்த பின்னர், அல்லது நீங்கள் நோயுற்றிருக்கும்போது அல்லது காயப்பட்டிருக்கும்போது இந்த சேவைகள் உங்களுக்கு உதவி செய்யக்கூடும்.

Tamil – Health Care in Ontario: Finding Home Care Cat# 015594 Nov/2010 © Queen's Printer for Ontario

***யார் உதவு செய்யலாம்:*** நீங்கள் தகுதியுள்ளவராக இருந்தால், தாதிகள், பௌதீக சிகிச்சையாளர், தொழில் சார்ந்த சிகிச்சை வல்லுனர்கள், சமூக சேவையாளர்கள், மொழி-பேச்சு வல்லுனர்கள், மற்றும் நல உணவு வல்லுனர்கள் என்பவர்களிடமிருந்து நீங்கள் பராமரிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக உங்கள் உள்ளூர் Community Care Access Centre (CCAC) ஏற்பாடுகளைச் செய்யும்.

***அவர்கள் உங்களுக்கு எப்படி உதவி செய்யலாம்:***

- உங்கள் தேவைகளை மதிப்பீடு செய்வார்கள்
- திட்டமிடுவார்கள் மற்றும் பராமரிப்புக் கொடுப்பார்கள், அல்லது
- உங்களை நீங்களே பாராமரித்துக்கொள்ளக் கற்றுக் கொடுப்பார்கள்

தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்களையும் நீங்கள் பெற்றுக்கொள்ளகூடும்.

தனிப்பட்ட பராமரிப்பு மற்றும் ஆதரவு

இந்தச் சேவைகள் அநேக தினசரி வாழ்க்கை நடவடிக்கைகளில் உங்களுக்கு உதவி செய்யலாம்.

**யார் உதவி செய்யலாம்**: நீங்கள் தகுதியுள்ளவர்களாயிருந்தால், சில உதவிகளைப் பெற்றுக்கொள்ள உங்கள் உள்ளூர் Community Care Access Support (CCAC) உதவி செய்யலாம். இவர்கள் பெரும்பாலும், தனிப்பட்ட ஆதரவளிக்கும் பணியாட்கள், உடல்நலப் பராமரிப்பளிக்கும் உதவியாளர்கள், தனிப்பட்ட பராமரிப்பளிக்கும் பணியாளர்கள், அல்லது உதவியாளர்கள் என அழைக்கப்படுவார்கள்.

***அவர்கள் எப்படி உங்களுக்கு உதவி செய்வார்கள்:***

- கழுவுதல் மற்றும் குளித்தல், வாயைப் பராமரித்தல், முடியைப் பராமரித்தல், தோல் சம்பந்தப்பட்ட நோய்களிலிருந்து பரமாரிப்பு, ஒழுங்கான கை அல்லது கால் பராமரிப்பு போன்ற உங்கள் தனிப்பட்ட சுகாதாரப் பராமரிப்புக்கு உதவி செய்வார்கள்
- நாற்காலிகள், வாகனங்கள் அல்லது கட்டிலில் அமர அல்லது அவற்றிலிருந்து இடம் மாற உங்களுக்கு உதவி செய்வார்கள்.
- நீங்கள் உடைகளை அணிவதற்கு அல்லது உடைகளை கழற்றுவதற்கு உதவி செய்வார்கள்
- நீங்கள் உணவு உண்பதற்கு உதவி செய்வார்கள்
- நீங்கள் கழிவறைக்குச் செய்வதற்கு உதவி செய்வார்கள்
- நீங்கள் சந்திப்புத் திட்டங்கள் செய்வதற்கு வழித்துணையாக வருவார்கள்.

வீட்டை நிர்வகித்தல்

வீட்டை நிர்வகிக்கும் சேவைகள் உங்கள் வழக்கமான வீட்டு வேலைகளைச் செய்வதற்கு உங்களுக்கு உதவி செய்யும்.

*யார் உதவி செய்வார்கள்:* நீங்கள் தகுதியுள்ளவர்களாக இருந்தால், இந்த சேவைகளை உங்களுக்கு அளிக்கக்கூடிய ஒரு நபரை அல்லது ஒரு நிறுவனத்தைக் கண்டுபிடிக்க உங்கள் உள்ளூர் Community Care Access Centre (CCAC) உங்களுக்கு உதவி செய்யும்.

*அவர்கள் உங்களுக்கு எப்படி உதவி செய்வார்கள்:*

- உணவு வகைப் பட்டியலைத் திட்டமிடுதல் மற்றும் உணவு தயாரித்தல்
- பொருட்களை வாங்குவதற்குக் கடைகளுக்குச் செல்லுதல்
- வீட்டை ச் சுத்தப்படுத்துவதில் எளிதான வேலை மற்றும் சலவை செய்தல்
- கட்டணச் சீட்டுகள் கட்டுதல் அல்லது வங்கிக்குச் செல்லுதல்

சமூக ஆதரவு சேவைகள்

நீங்கள் வீட்டில் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் வாழ இந்தச் சேவைகள் உதவி செய்யும்.

*யார் உங்களுக்கு உதவி செய்யலாம்:* இந்தச் சேவைகளை ஆதாயத்தை எதிர்பார்க்காத கூட்டுத்தாபனங்கள் அல்லது தனியார் நிறுவனங்கள் மூலமாக நீங்கள் கண்டடையலாம்.

*அவர்கள் உங்களுக்கு எப்படி உதவி செய்வார்கள்:*

- போக்கு வரவு
- உணவு
- பராமரிப்பளிப்பவர் உதவி
- வீட்டு உதவி
- பகல்நேரத் திட்டங்கள்
- சமூக மற்றும் பொழுதுபோக்கு சேவைகள்

### 3. வீட்டுப் பராமரிப்புச் சேவைகளுக்கு யார் நிதியுதவி செய்வார்கள்?

வீட்டுப் பராமரிப்பு சேவைகளுக்கு அநேக வழிகளில் நிதியுதவி செய்யப்படுகின்றது:
அரசாங்கம் மூலமாக (ஒன்டாரியோ மற்றும் /அல்லது நகராட்சி அரசாங்கங்கள்)

- தன்னார்வ நிறுவனங்களுக்கு நன்கொடைகள் அளிப்பதன் மூலம் ( பெரும்பாலும் இந்த வகைகளான சேவைகளை அளிப்பவர்கள்)
- உங்கள் தனிப்பட்ட காப்புறுதி அல்லது உதவி நிதித் திட்டங்கள் ( உதாரணமாக, தனியார் உடல்நலக் காப்புறுதி) மூலமாக
- உங்கள் மூலமாக (உதாரணமாக, நீங்களே உங்களுக்களிக்கப்படும் சேவைகளுக்கு கட்டணம் செலுத்தும்போது)

தங்கள் சொந்த வீட்டில் தங்கியிருக்க விரும்பும் அநேகர், பல வழிகளில் நிதியுதவி வழங்கப்படும் சேவைகளின் ஒரு கலவையை ஏற்பாடு செய்வார்கள்.

## வீட்டுப் பராமரிப்புச் சேவையை எப்படி ஏற்பாடு செய்யலாம்

**4. வீட்டுப் பராமரிப்புச் சேவையை, எனக்கு அல்லது நான் நேசிக்கும் ஒருவருக்கு நான் எப்படிக் கண்டுபிடிக்கலாம்?**

உங்கள் உள்ளூர் Community Care Access Centre (CCAC) உங்களுக்குப் பின்வருமாறு உதவி செய்யலாம்:

- உங்கள் பராமரிப்புத் தேவைகளை அடையாளம் கண்டுகொள்ளுதல்
- உங்கள் தேவைகள் மற்றும் சூழ்நிலைகளை மிகசிறந்த வழியில் பூர்த்தி செய்யக்கூடிய சேவைகளை ஆராய்தல்
- இந்த சேவைகளை உங்களுக்கு எவர் அளிக்கக்கூடும் என்பதைப் பற்றிய தகவல்களைச் சேகரித்தல்
- நீங்கள் கேட்டுக்கொள்ளும் சேவைகளை உருவாக்கிக் கொடுத்தல்

முதற்படி எடுப்பதற்கு, உங்களுக்கு அருகாமையிலிருக்கும் ஒரு CCAC அணுகு மையத்தைக் கண்டு பிடித்தல்.

**5. அரசாங்கத்தினால் நிதியுதவி செய்யப்படும் வீட்டுப் பராமரிப்புக்கு நான் தகுதியுள்ளவனா(ளா) என்பதை நான் எப்படிக் கண்டுபிடிக்க முடியும்?**

உங்கள் உள்ளூர் Community Care Access Centre (CCAC) நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டும். அரசாங்கத்தினால் நிதியுதவி செய்யப்படும் வீட்டுப் பராமரிப்புக்கு நீங்கள் தகுதியுள்ளவரா என்பதை உங்கள் மையம் தீர்மானிக்கும்.

**6. அரசாங்க நிதியுதவிக்கு நான் தகுதியற்றவனா(ளா)னால் எப்படி உதவி பெறலாம்?**

உங்களுக்குத் தேவைப்படும் சேவைகளுக்கு நீங்கள் கட்டணம் செலுத்த வேண்டும். நீங்கள் தெரிவு செய்யும் நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு நீங்கள் நேரடியாக விண்ணப்பிக்கலாம். சேவைகளைக் கண்டுபிடிப்பதற்கு உங்கள் உள்ளூர் Community Care Access Centre (CCAC) உங்களுக்கு உதவி செய்யலாம்.

**7. ஒன்டாரியோவிலுள்ள உடல்நலப் பராமரிப்புத் தொகுதியைப் பயன்படுத்துவது சம்பந்தமாக எனக்குக் கேள்விகள் இருக்கின்றன. நான் யாரை அழைக்க முடியும்?**

காலை 8:30 முதல் மாலை 5:00 மணிவரை சேர்விஸ் ஒன்டாரியோவை இன்ஃபோலைனில் தொடர்பு கொள்ளவும். பணியாளர்களால் ஆங்கிலம், பிரெஞ் மற்றும் வேறு 20 மொழிகளில் உங்களுக்கு உதவி செய்ய முடியும். பின்வரும் எண்ணை அழைக்கவும்:

- 1-866-532-3161
- டிடிவை 1-800-387-5559
- டொரொன்டோவில், டிடிவை 416-327-4282

இங்கு மேலுமதிகத்தை இணையத்தளத்தில் கற்கலாம் health.gov.on.ca